ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2295/44 - 2022 සැප්තැම්බර් මස 03 වැනි සෙනසුරාදා - 2022.09.03

2295/44 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரணம் | விசேட வியாபார பண்ட அறவீடு |
| 1. | 10.05 | 1005.90 | பிற மக்காச் சோளம் | கி.கி. ஒன்றிற்கு 10 ரூபா |
| 2. | 10.07 | 1007.90 | பிற இறுங்கு தானியம் | கி.கி. ஒன்றிற்கு 10 ரூபா |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, திரிபோஷ உற்பத்திக்காக இலங்கை திரிபோஷ லிமிட்டெட்டினாலான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள சோள இறக்குமதியின் மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபாரப் பண்ட அறவீடான கி.கி. ஒன்றிற்கு

1A - PG 5957 — 481 (2022/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

10 ரூபாவில் இருந்து, கி.கி. ஒன்றிற்கு 1 ரூபாவினை அறவிட்ட பின்பு, மிகுதித் தொகையினை விலக்களிக்குமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இந்தக் கட்டளையானது, 2022, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் ஆரம்பமாகி, 2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 03.